போக்கி, தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்று மீண்டும் புத்துயிர் பெற்றிருக்கிறது. அந்த அடிப்படையில்தான், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குத் தேவையான நிதி உதவிகளை, சென்ற ஆண்டுகூட, 20,000 கோடி ரூபாய் வங்கிக் கடன் போன்றவற்றை இலக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு உருவாக்கித் தந்தார்கள். ஆனால், அந்த இலக்கையும் தாண்டி, 21,350 கோடி ரூபாய் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் போன்றவை வழங்கப்பட்டன. மேலும் இந்த ஆண்டு 25,000 கோடி ரூபாய் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான வங்கிக் கடன் போன்ற உதவிகள் செய்வதற்கு எங்களுக்கு இலக்கு நிர்ணயித்திருக்கிறார்கள். அதையும் நிறைவேற்றி, நீங்கள் ஒப்பிட்டுப் பார்த்தால், எப்போதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்கிறதோ, அப்போதெல்லாம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் வளர்ச்சி பெற்று பொருளாதார நிலை மேம்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டுகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மேலும், மாண்புமிகு உறுப்பினர் கூறியுள்ள கருத்துகள் ஏற்கெனவே அரசின் செயல் திட்டத்தில் இருக்கின்றன. அரசு நிறுவனங்கள், அரசு அலுவலகங்கள் பயன்பாட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்க வேண்டுமென்று சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. இனிவருங்காலங்களில் கூடுதல் கவனம் செலுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 195, மாண்புமிகு உறுப்பினர் திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம், மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

195—

கடல்சார் மீன்வளக் கல்லூரி

***14300—திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2022 ஏப்ரல் 28]

(அ) இராமநாதபுரம் தொகுதி, இராமேஸ்வரம் பகுதியில் கடல்சார் மீன்வளக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் தொகுதி, இராமேஸ்வரத்தில் கடல்சார் மீன்வளக் கல்லூரி தொடங்குவதற்கான திட்டம் எதுவும் தற்போது அரசிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள்.*

திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள 14 கடற்கரை மாவட்டங்களில் இராமநாதபுரம் மாவட்டம், 237 கிலோ மீட்டர் நீளம் கொண்ட கடற்கரை, சுமார் 1.70 இலட்சம் மீனவ மக்கள் தொகைகொண்ட பகுதியாகும். மீன் உற்பத்தியில் இம்மாவட்டம் முதன்மை இடத்தில் இருந்தாலும், மீனவ மக்களின் கல்வித்தரம் குறிப்பாக, மீன்வளம் சார்ந்த கல்வித் திறன் மிகவும் குறைவாக உள்ளது. இம்மாவட்டத்திற்கு ஒரு மீன்வளக் கல்லூரி தேவைப்படுகிறது. தற்பொழுது மீன்வள பல்கலைக்கழகத்தின்கீழ் இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் வட்டாரம், அரியமான் கடற்கரையில் மீன்வளத் தொழிற்பயிற்சி மையம் தொடங்கப்பட்டு, கடலில் மீனவர்கள் பாதுகாப்பிற்கான பயிற்சி, கடல்சார் engine பணிப் பட்டறை, engine பராமரிப்பு போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆகவே, இப்பயிற்சி நிலையத்தினைத் தரமுயர்த்தி மீன்வளக் கல்லூரியாக மாற்றியமைத்துத் தர மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மீன்வளக் கல்லூரி தொடங்க*

வேண்டுமென்றால், குறைந்தது 65 ஏக்கர் நிலமும், உட்கட்டமைப்பு வசதி, ஊதியம் மற்றும் இதர தொடர் செலவினங்களுக்கு ரூ.110 கோடி நிதியும் தேவைப்படுகிறது. தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின்கீழ் தற்போது தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடியிலும், நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் மற்றும் தலைஞாயிறு ஆகிய இடங்களிலும், செங்கல்பட்டு மாவட்டத்தில், வாணியஞ்சாவடி மற்றும் முட்டுக்காடு ஆகிய இடங்களிலும், திருவள்ளூர் மாவட்டத்தில் பொன்னேரி மற்றும் மாதவரம் ஆகிய இடங்களிலும் மீன்வளம் சார்ந்த படிப்புகளுக்கான கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டவாறு இராமநாதபுரம் மாவட்டம், மண்டபத்தில் மீன்வளம் சார்ந்த தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கான கல்லூரி தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழகத்தால் கடந்த 2019 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இராமநாதபுரம் மாவட்டத்தில் மீனவர்கள் அதிகம் இருப்பதால், அந்தப் பகுதியில் கடல்சார் மீன்வளக் கல்லூரி வேண்டுமென்று கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகச் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இந்தக் கல்வியாண்டு முதல் இளங்கலை மீன்வள அறிவியல் பட்டப் படிப்பிற்கு மீனவர் சமுதாய மாணவர்களுக்கு 5 சதவிகிதமாக இருந்த இட ஒதுக்கீட்டை 20 சதவிகிதமாக உயர்த்தி ஆணையிட்டதன் பலனாக, இந்தக் கல்வியாண்டில் மீனவர் சமுதாயத்தைச் சேர்ந்த 24 மாணவர்கள் இளங்கலை மீன்வள அறிவியல் பயில்வதற்கு வாய்ப்புப் பெற்றுள்ளனர். இதில் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களும் பயனடைகின்றனர் என்பதை இந்த மாமன்றத்தில் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்வதோடு, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்ட அந்த மீன்வளக் கல்லூரியை மாண்புமிகு முதலமைச்சர் தளபதியாருடைய கவனத்திற்குக் கொண்டுசென்று, நிதிநிலைக்கேற்றாற்போல் அவர்களுக்கு மீன்வளக் கல்லூரி அமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்போம் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2022 ஏப்ரல் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள். நன்றி சொல்லுங்கள்.*

திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் மிகவும் வறட்சியான மாவட்டம். குறிப்பாக அந்த மாவட்டத்தில், 30 சதவிகிதத்திற்கு மேலான மக்கள் மீன்பிடி தொழிலை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே ஆலோசித்து வழங்குவதாகச் சொல்லியிருக்கிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி சொல்லுங்கள்.*

திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் அறிக்கையிலே இராமேஸ்வரத்திற்கு புதிய மீன்பிடி துறைமுகம் தருவதாகச் சொல்லியிருந்ததை, நடந்து முடிந்த மானியக் கோரிக்கையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இராமேஸ்வரத்திற்கு 23 கோடி ரூபாய் மதிப்பில் அறிவித்திருக்கின்றார்கள். அதற்கு அந்த மாவட்ட மக்களின் சார்பிலும், மீனவ மக்களின் சார்பிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 196, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

196—

தார்ச்சாலை

***4078—திரு. ட்டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, மஞ்சுகொண்டப்பள்ளி ஊராட்சி, பேல்பட்டி மலைக் கிராமத்திற்கு தார்ச்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?